

# நீடித்த நிலையான கலைஞர்!

■ நீரை.மகேந்திரன்

தமிழ்நாட்டின் நீடித்த நிலையான வளர்ச்சிக்குத் தெளிவான திசையைத் தீர்மானித்த ஆட்சியாளர் முத்தமிழறிஞர் கலைஞர் எனக் காலம் எழுதி வைத்துள்ளது. அவரது சிந்தனையும் உழைப்பும் ஈடு இணை இல்லாதது.

தமிழ்நாட்டின் எதிர்கால அரசியலைத் தீர்மானிக்கக் கூடிய சக்தியாக கலைஞர் இருப்பார் என தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் அழுத்தமாக நம்பியதை அறிவோம். எடுத்துக் கொண்ட பொறுப்பில் கலைஞர் காட்டும் முனைப்பும், உழைப்பும் வேகமும் பலர் சொல்லக் கேட்டிருக்கிறோம்.

## வேகமும் நிதானமும்

குறிப்பாக, அவர் உழைப்புக்கு அல்லது அவரின் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாது என்பது, அவருடன் பயணித்த அரசியல் ஆளுமைகள் தொடங்கி, அரசு அதிகாரிகள் வரை பலரும் கூறும் கருத்தாகும். புயல் போன்ற அரசியல் நெருக்கடிகளை எல்லாம் எதிர்கொண்டு, தி.மு.கழகத்தையும் தன்னையும் நிலைநிறுத்திக் கொண்டு, நீடித்த நிலையான இயக்கமாகத் தன்னை மாற்றிக் கொண்டவர் கலைஞர். அந்த வகையில் STABILITY AND SUSTAINABILITY வளர்ச்சி கொண்ட ஆளுமையாக அவரைப் பார்க்கலாம். எந்த உணர்ச்சிகரமான நேரத்திலும், அவர் தன்னிலை மறந்து வினையாற்றியதில்லை என்பதற்கு, அவரின் பயணத்தில் பல ஆயிரம் குறிப்புகள் உள்ளன. அவர் எந்த அளவுக்கு வேகம் கொண்டிருந்தாரோ அதே அளவுக்கு நிதானம் கொண்டவர் எனச் சொல்லலாம்.

ஆட்சி அதிகாரம் என்பது சாமானியர்களை நிலைகுலைய வைக்கும் என்பதற்கு இந்திய அரசியல் வரலாற்றில் நிறைய சான்றுகள் உள்ளன. நீடித்த நிலையான சிந்தனை அற்றவர்கள் பலரும் அரசியல் வரலாற்றில் இருந்து அப்புறப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். ஆட்சி அதிகாரம் இருந்தாலும் போனாலும், கலைஞர் காட்டிய நிதானம் என்பது அவரின் சிந்தனைக்குச் சான்று.

## கொந்தளிப்பான சூழல்கள்

பேரறிஞர் அண்ணா மறைவுக்குப் பின், அவர் சந்தித்த மிகக் கொந்தளிப்பான நிகழ்வுகளின் போதும், மிக இயல்பாக இந்த நிதானம் வெளிப்பட்டிருக்கிறது.

1991-ஆம் ஆண்டு, ஆட்சிக் கலைப்பின் போது அந்த நேரத்தை ஒரு நேர்காணலில் குறிப்பிடுகிறார் கலைஞரின் தனிச்செயலாளராகப் பணியாற்றிய ராஜமாணிக்கம்.

ஆட்சிக் கலைப்பின் உத்தரவு வந்த நேரத்தில் அவர் பெரியார் குறித்த ஒரு புத்தக வெளியீட்டு நிகழ்ச்சியில் இருக்கிறார். ஆட்சிக் கலைப்புக்கான உத்தரவு எந்நேரமும் வரலாம் என்கிற எதிர்பார்ப்பும் அவரிடம் இருந்தது. அதை எந்த வழியிலாவது தடுக்க வேண்டும் என்கிற குறுக்கு வழிகளை எல்லாம் அவர் கையாளவில்லை.

புத்தக வெளியீட்டுக்குக் கிளம்பிய நேரத்தில் டெல்லியில் இருந்து அழைப்பு வரும் என்பதால், தனிச் செயலாளரை வீட்டில் இருக்கச் செய்கிறார். அதுபோலவே அழைப்பு வருகிறது. ஆட்சிக் கலைப்பு செய்தியை எடுத்துக் கொண்டு செல்கிறார் ராஜமாணிக்கம். இவரின் பதற்றத்தைப் பார்த்த முதலமைச்சர் கலைஞர், விவரத்தைக் கேட்டுக் கொண்டு திரும்பவும் புத்தக வெளியீட்டு நிகழ்ச்சியில் தொடர்கிறார் ஓர் அதிர்ச்சிகரமான செய்தியாக அவர் காட்டிக் கொள்ளவில்லை. அந்த நிகழ்வை மாற்றிக் கொள்ளவில்லை அல்லது நிகழ்வை ஒத்தி வைத்து விட்டுக் கிளம்பவில்லை. அப்படி ஒரு நிதானம் . இந்த இயல்பு, சராசரியான மனிதமனத்தை விட மேலானது, என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஆனால், இந்த நிதானம் அனுபவ முதிர்ச்சியால் வந்தது மட்டுமல்ல.

**‘எனக்குப் பின்னால் என்னை விட மேலாக உழைக்க எத்தனையோ பேர் இருக்கிறார்கள். எனக்கு விடை கொடு, நான் விட்டுச் செல்லும் லட்சியத்தை நிறைவேற்று’**

1976-ஆம் ஆண்டு ஆட்சிக்கலைப்பின் போதும் இப்படியான மனநிலையையே கொண்டிருந்தார். ஜனவரி 31-ஆம் தேதி இரவு ஆட்சி கலைக்கப்படு கிறது. காலையில் ஒரு பத்திரிகையாளர் சந்திப்பு. பரபரப்பான அரசியல் சூழலிலும் பத்திரிக்கையாளர் சந்திப்பை நிகழ்த்துகிறார். தனி நேர்காணல் அளிக்கிறார். அந்த நேர்காணல்களில் எந்தக் கழிவிறக்கமும் கொள்ளாமல், கருத்துச் சுதந்திரத்துக்கான, ஜனநாயகத்துக்கான குரலாக அவர் இருக்கிறார்.

2001-ஆம் ஆண்டு, அப்போதைய ஆட்சியாளரின் காழ்ப்புக் காரணமாக கலைஞர் கைது செய்யப்பட்டார். மிகக் கொந்தளிப்பான உணர்ச்சிகரமான சூழல் தமிழ்நாட்டில். சிறையில் இருந்து வெளிவந்து நேராகப் பத்திரிகையாளர்களைச் சந்திக்கிறார். பத்திரிக்கையாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர் “உங்களுக்கும் ஜெயலலிதா அம்மையாருக்கும் என்ன பகை?” “என்ன பகை? நான் என்ன அவருக்கு வளர்ப்பு மகனா?” என அந்த இடத்திலும் அரசியல்தான்.

2011 ஆம் ஆண்டு, கழகத்துக்குக் குறிப்பிடத்தக்க சோதனை நிகழ்ந்த ஆண்டுகளில் ஒன்று. சமச்சீர் கல்வி அமல்படுத்தப்படாது என அ.தி.மு.க. அரசு ஒரு நிலை எடுத்த போது, அதற்கு எதிராகக் கழகத்தின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அதில் சாதகமான தீர்ப்புப் பெற்றிருந்தார். தனது உடல்நிலையையும் பொருட்படுத்தாது, அறிவாலயத்தில் செய்தியாளர் சந்திப்பை நடத்துகிறார். அப்போது அதற்குத் தொடர்பில்லாத அலைக்கற்றை வழக்கு தொடர்பாக, ஒரு கேள்வி அங்கு எழுப்பப்பட்டது. இந்த நேர்காணலில் முக்கியத்துவம் கருதி அது தொடர்பான கேள்விகளைக் கேளுங்கள் என அழுத்தம் கொடுக்கிறார் கலைஞர்.

ஓர் அசாதாரணச் சூழ்நிலையையும், சாதாரணச் சூழலாக அதைக் கடந்து செல்லும் மிகப்பெரிய நிதானம் அவரிடம் எப்படி வந்தது?

## அரிய மருந்து

‘நெஞ்சுக்கு நீதி’ மூன்றாம் பாகத்தில் குறிப்பிடுகிறார். “இந்த அரிய மாமருந்தாம் எழுத்தைத் துணை கொண்ட எனக்கு, சபலம், சஞ்சலம், சலனம் இவற்றைக் காலால் மிதிக்கும் கொள்கையும் குறிக்கோளும்; ரத்த நாளமாக, இதயத் துடிப்பாக அமைந்துவிட்ட காரணத்தால் நானும் கழகமும் எதிர்கொண்டு மீண்டவை ஏராளம்’’ என்கிறார். பல்வேறு பட்ட உணர்வுகளையும் கோபங்களையும் அவர் தனது எழுத்துகளின் வழியே அடக்கி ஆண்டது, இந்த நிதானத்துக்கு முக்கியக் காரணம்

13 ஆண்டு காலம் எதிர்க்கட்சியாக இருந்துவிட்டு, மூன்று தேர்தலில் தோற்று போனாலும், அதன் பிறகு ஆட்சிப்பொறுப்புக்கு வந்து ஏழை எளிய மக்களுக்காக எத்தனையோ சாதனைகளைச் செய்வதற்கு அவரின் நிதானமான இயல்பும், அதை அளித்த எழுத்துகளுமே காரணம்.

“இத்தனை ஆண்டுகளில் கழகத்தில் எத்தனையோ மாற்றங்கள், ஏற்றத்தாழ்வுகள். முழுமையாக ஒருநாள் இதயத்தை இடரும் எந்தச் செய்திகளும் இல்லை. எனவே இன்று நிம்மதி என அமைதியாக ஒரு சேர இரவும் பகலும் இணைந்து கழிந்ததே கிடையாது. அப்படி ஒரு வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்துக் கொண்ட எனக்கு, பாலைவனத்தில் நடந்தால் பாதம் கொப்பளிக்குமே என்பது கூடவா தெரியாது. ஆனால் எனக்குப் பாதம் மட்டும் கொப்பளிக்கவில்லை. இதயமே கொப்பளித்தது. அதற்கு எந்த மருத்துவரும் தர முடியாத மருந்தாக என் வசம் இருப்பது எழுத்து” என்கிறார். உணர்ச்சிக் கொந்தளிப்பான சூழல்களுக்கு எழுத்து அவரை நிதானம் செய்திருக்கிறது.

## தொடர்ந்து செய்வேன்

‘சந்திரோதயம்’ என்கிற நாடகம் பேரறிஞர் அண்ணா எழுதி, நடித்தது. அந்த நாடகத்தில் துரைராஜாக நடித்த அண்ணா சாம்பசிவமாக நடித்த கலைஞரிடம் சொல்வார் ‘எனக்குப் பின்னால் என்னை விட மேலாக உழைக்க எத்தனையோ பேர் இருக்கிறார்கள். எனக்கு விடை கொடு, நான் விட்டுச் செல்லும் லட்சியத்தை நிறைவேற்று’ என்பார்.

அதற்குக் கலைஞர் ‘தொடங்கி வைத்த வேலையைத் தொடர்ந்து செய்து விடுவேன். இது உறுதி’ எனக் கூறுவார்.

1943-ஆம் ஆண்டு நடிக்கப்பட்டது அந்த நாடகம். அந்தச் சொற்கள் நிலைபெற்று நீடிக்க வேண்டும் என நிலைத்த உறுதியான நிதானமான ஆளுமைப் பண்பு கொண்டவராக கலைஞர் உருவானார்.

அந்த நாடகம் குறித்து கலைஞர் பின்னாளில் எழுதுகையில் குறிப்பிட்டார். “சந்திரோதயம் அண்ணாவின் கைவண்ணம். சூர்யோதயம் தம்பிகளின் கை வண்ணமாக நிலைக்கட்டும்” என்றார். அந்தச் சொற்கள் அவருக்கே பொருத்தமாக நிலைத்து நிற்கும்.

## திராவிட இயக்க இதழ்கள் - நாத்திகம்




தந்தை பெரியாரின் கொள்கைகளைப் பரப்புவதற்காக, அவரது அணுக்கத் தொண்டர்களில் ஒருவரான இராமசாமி என்பவரால் 1958-ஆம் ஆண்டு செப்டம்பர் 18 அன்று தொடங்கப்பட்ட இதழ் ‘நாத்திகம்’. இதனால் இதழ் தொடங்கப்பட்ட சில காலத்திலேயே அவர் ‘நாத்திகம்’ இராமசாமி என்று அழைக்கப்பட லானார்.

தொடக்கத்தில் நாளிதழாக இருந்து, பிறகு வார இதழாக மாற்றம் கண்டது. மூடநம்பிக்கை எதிர்ப்பு, பார்ப்பனிய எதிர்ப்பு, அனைத்து மதங்களையும் விமர்சித்தல், திரைப்படம், தொலைக்காட்சி ஆகியவற்றின் பண்பாட்டுச் சீரழிவுகளைச் சாடுதல் போன்றவற்றை உள்ளடக்கிய படைப்புகள் இந்த இதழில் வெளிவந்துள்ளன.

அந்தப் படைப்புகளில் பெரும்பாலானவை இராமசாமியே எழுதியதுதான். கட்டுரைகளில் தென்படும் எள்ளலும் கோபமும் எளிய வாசகர்களின் பரப்பை இந்த இதழுக்குப் பெற்றுத் தந்தன. 2009 செப்டம்பரில் அவர் இறக்கும் வரை 51 ஆண்டுகளாக இந்த இதழ் வெளிவந்திருக்கிறது.

## ஃப்ளாஷ்பேக்



## வெள்ளத்தில் தப்பித்த படம்!



தாயகம் கவி

1977-ஆம் ஆண்டு நான் 7 -ஆம் வகுப்பு படிக்கும் பொழுது மிசா வழக்கு நிதி அளிப்பதற்காக தலைவர் கலைஞரைச் சந்தித்தேன். அன்று முதல் ஆண்டுதோறும் அவரைச் சந்திப்பது வழக்கமானது. அப்படி 1982-இல் சென்னை கோபாலபுரம் இல்லத்தில் தலைவரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. 2015-ஆம் ஆண்டு பெய்த பெருமழையைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளத்தில் சிறிய அளவிலான பாதிப்புடன் இந்தப் புகைப்படம் பத்திரமாய் என் கைக்குக் கிடைத்து. இன்றைக்குப் பார்த்தாலும் பெரும் நிம்மதியைத் தருகிறது.

**-ப.தாயகம் கவி,எம்.எல்.ஏ**
**கழக துணை அமைப்புச் செயலாளர்,**
**திரு.வி.க.நகர்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் : youthwing@dmk.in

## கருவூலம்

### குடியரசு தலைவர் விருது

**1954-ஆம் ஆண்டில் கலைஞர் கைவண்ணத்தில் ‘மனோகரா’, ‘மலைக்கள்ளன்’, ‘அம்மையப்பன்’ ஆகிய 3 திரைப்படங்கள் வெளியாகி, மூன்றும் வெற்றிப் படங்களாக அமைந்தன. ‘மலைக்கள்ளன்’ திரைப்படம் குடியரசுத் தலைவர் விருது பெற்ற முதல் தமிழ்த் திரைப்படம் என்ற சிறப்பைப் பெற்றது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 401




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131